22nd November 1963]

With a view to make nationalised text-books available to the students easily and in time, the agents are required according to a clause in the agreement entered into with them, to open sub-depots in each taluk by themselves or through sub-agents under their control. Similarly the agent, Madras city has to open ten sub-depots in the City. The books are also being printed according to a time schedule so that sufficient number may be available when the schools re-open after the summer vacation.

திரு. கரு. சீமைச்சாமி : பல ஏற்பாடுகள் செய்திருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூடம் திறந்து இரண்டு மாதத்திற்குள்கூடக் கிடைப்பது இல்லை. ஆகவே எப்ரல் மாதமே பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகம் செய்ய உத்தரவிட முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு சொன்னதுபோல இந்த விஷயம் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக்கூடத் துவக்க ஆண்டு

* 453 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடத் துவக்க ஆண்டினை ஜனவரியில் துவக்குவதற்கு யோசனை ஏதாகிலும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இது சம்பந்தமாகக் கல்வி நிபுணர்கள் அரசாங்கத்திற்குக் கருத்துக்கள் கூறியிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) No. In respect of colleges, a suggestion was received and communicated to the two universities for necessary action.

S.S.L.C. Examinations

* 454 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have got any proposal to reform the examination system to reduce the failures in the Secondary School Leaving Examinations; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சென்ட்ரல் அட்வைசரி போர்டில் இருந்து இந்தத் தேர்வு முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதா? அந்த யோசனையின் மீது அரசாங்கத்தின் கருத்து என்ன?

[22nd November 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தேர்வு முறைகளை எப்படி மாற்றி அமைப்பது என்று யோசனை எதுவும் கூறப்படவில்லை. ஆனால் தேர்வுகளில் அதிகம் பேர் தேருமல் போய்விடுவது தவிர்க்கப் படவேண்டியது. இதனால் விரயம் தவிர்க்கப்படும். இதைப் பொது வாகக் கவனித்து விரயத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யவேண்டு மென்பது மத்திய அரசாங்கத்தின் கருத்து. அதுவே இந்த மாநில அரசாங்கத்தின் கருத்துமாகும்.

திரு. இராம. அரங்கண்ணல்: எஸ். எஸ். எல். ஸி. தேர்வில் மூன்று தடவை தேர்வு அடையாவிட்டால் பிறகு அந்த மாணவன் பரிட்சை எழுதக்கூடாது என்ற விதி இருக்கிறதா? அது மாற்றப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. செ. மாதவன்: இந்த மாநில கல்வி இயக்குநர் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வருஷக் கடைசியில் தேர்வு நடத்துவது என்று மட்டும் கூடாது, மாதந்தோறும் பரிட்சை நடத்தி, இந்தப் பரிட்சை களின் சராசரியைக் கொண்டு ஒரு மாணவனை ப்ரமோஷன் செய்ய வேண்டும் என்பதாக ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா? அது அரசாங்கத்தின் ஆணை பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது கூட எஸ்.எஸ்.எல்.ஸி. பப்ளிக் பரிட்சையைத் தவிர, மற்ற வகுப்புகள் சம்பந்தப்பட்ட வரை க்வார்டர்லி, ஹாப் எர்லி என்று பரிட்சை நடத்தித்தான் பொதுவாகத் தேர்வு கொடுக்கிற வழக்கம் இருக் கிறது. இந்த ஏற்பாடு எல்லாம் கீழ் வகுப்புகள் சம்பந்தப்பட்ட வரைதான்.

ஆசிரியர்கள் பிராவிடெண்ட் பண்டு

*** 455 கேள்வி.—திரு. முனு ஆதி:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் ஆசிரியர்களிடமிருந்து அதிகப்படி பிராவிடெண்ட் பண்டு வசூலிக்கப்படுவனவற்றிற்கு வழக்கமான முறைப்படி அரசாங்கமும் தன் பங்குத் தொகையை அதிகப்படுத்தி செலுத்துகிறதா?

(இ) இவ்விதம் அதிகப்படியாக வசூலிப்பது தேசிய நெருக்கடி தீரும் வரைதானு அல்லது நிரந்தரமாக இனி இவ்விதமே வசூலிக்கப்படவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை.

(இ) இவ்விதம் அதிகப்படியாக வசூலிப்பது தேசீய நெருக்கடி தீர்ந்த மாதத்திலிருந்து ஒரு வருடம் வரையில்தான் நடக்கும்.

(*a*) No.

(*b*) Deductions at the enhanced rates in the contribution to Provident Fund will be made till the expiry of one year from the month of cessation of the present emergency.